பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஐப்பசி 19 (4—11—68) திங்கள் ★ வெளியூர்: ஐப்பசி 20 (5—11—68) செவ்வாய் [இதழ்: 115

## ரேஷன் கார்டுகள்

சென்னை, நவ. 3—
"தற்போதைய உணவுப் பங்கீட்டு அட்டைகளுக்கு (ரேஷன் கார்டு) டிசம்பர் மாத இறுதிவரையில் அரிசி வழங்கப்படும்"

தற்போது உள்ள அட்டைகள் அக்டோபர் 31-ம் நாளோடு காலாவதியான போதிலும் இந்த அட்டைகளுக்கு அரிசி இல்லை என்று சொல்லாமல் டிசம்பர்மாத இறுதி வரையில்ரேஷன் கடைக்காரார்கள் பொது மக்களுக்கு அரிசியும் மற்ற உணவுப் பொருள்களும் வழங்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

# சேலத்தில் இரும்பு— உருக்குத் தொழிற்சாலை

## உருண்டை உருக்குகள் தயாரிக்கத் திட்டம்

### ஜப்பான் நிறுவன உதவியுடன் நிறுவத் தமிழக அரசு முயற்சி

சென்னை, நவ. 3—
சேலம் இரும்புக் கனியைப் பயன்படுத்திச் சிறு உருண்டைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு ஒரு ஜப்பானிய நிறுவனம் முன்வந்திருக்கிறது. தமிழக அரசின் தொழில் துறையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இந்த விவரத்தைக் கூறினர்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் உருக்காலைத் திட்டம் இடம் பெறுமா என்பது பற்றித் தெளிவாகத் தெரியாத நிலையில், சேலம் இரும்புக் கனியைப் பயன்படுத்த மாநில அரசு மேற்படி தொழிற்சாலையை அமைக்கும் திட்டத்தை வகுத்திருக்கிறது என்றும், இதற்கு மாநில அரசின் துவக்க முதலீடு சுமார் ரூ. 10 கோடியாக இருக்கும் என்றும் அவர் கூறினர்.

'ஜப்பானிய நிறுவனம் ஈக்விட்டி மூலதனத்தில் பங்கு கொள்வதோடு அந்நியச் செலாவணித் தேவையையும் கொடுத்துதவும். உருண்டைகளாக்கப்படும் இரும்புக் கனியை ஏற்றுமதி செய்வதன் மூலம் இத்தொகை ஈடுசெய்யப்படும்' என்றூர்.

இரும்புக் கனியைப் பயன்படுத்தி சிறு உருண்டைகள் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவுவதற்கு மத்திய அரசின் அனுமதி கோரப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

சேலம் உருக்காலைத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம்பெறும் என்று மாநில அரசு இன்னமும் நம்புவதாக அவர் கூறினர். இது குறித்து முதலமைச்சர் அண்ணாவும் தலைமையமைச்சர் இந்திரா காந்தியும் தொடர்ந்து கடிதப் போக்குவரத்து நடத்திவருகிறூர்கள்.

நான்காவது திட்டத்தை இறுதியாக முடிவு செய்யும்போது இந்தப் பிரச்சினை பரிசீலனை செய்யப்படும் என்றே இதுவரை மத்திய அரசு பதிலளித்துவந்திருக்கிறது என்றூர்.

நான்காவது திட்டத்தில் புதிய உருக்காலை எதுவும் இராது என்று மத்திய உருக்குத் துறை அமைச்சர் பி, சி. சேத்தி கூறியுள்ளதுபற்றிக் கேட்கப்பட்டது. சிறப்பு உருக்குகளையும், சலவை உருக்குகளையும் உத்தேசிக்கப்பட்டுள்ள சேலம் உருக்காலை தயார் செய்யும் என்று அதற்கு அவர் பதில் கூறினர்.

சேலத்திற்கு அருகில் கஞ்சமலையில் சுமார் 12-கோடி டன் காந்த சக்தியுள்ள இரும்புக் கனி இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. சேலம் இரும்புக் கனியையும், நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும் பயன்படுத்தி உருக்கு தயாரிக்கலாம் என்பதே இந்தத் திட்டம்.

## காவிரி நீர்த் திட்ட வேலை துவக்கம்

### அமைச்சர் கருணாநிதி விளக்கம்

சென்னை, நவ. 4—
சென்னை நகருக்குக் காவிரி யாற்று நீரைக் கொண்டுவரும் திட்டம் சம்பந்தமான துவக்க கட்ட வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. திட்டப் பணி சுமார் மூன்று ஆண்டுகளில் நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. கருணாநிதி செய்தியாளர்களிடம் கூறினர். இத்திட்டத்துக்கு ரூ. 21.3 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்துக்குத் திட்டக் குழு அங்கீகாரமளித்துள்ள தகவலைத் தமிழக அரசுக்குத் தெரிவித்த திட்டக் குழு உறுப்பினர் நாக் சௌத்ரி, மத்திய சுகாதாரத் துறையைக் கலந்து துவக்க வேலைகளை மேற்கொள்ளலாம் என தமிழக அரசுக்கு எழுதியுள்ளார் என்றும் அமைச்சர் கூறினர்.

அமைச்சர் கூவம் நதி சீரமைப்புப்பற்றிக் குறிப்பிடுகையில் கால்வாயின் இரு கரைகளிலும் உள்ள சேரிகளை அகற்றி, அந்தச் சேரிவாசிகளுக்கு மாற்றுக் குடியிருப்பு வசதி செய்வதற்கான திட்டத்தை வகுப்பதற்காக இன்னும் ஒரு வாரத்தில் அதிகாரிகள் மாநாடொன்று நடைபெறும் என்று கூறினர்.

# இலண்டனில் அண்ணா

## நாளை மறுநாள் சென்னை வருகை

இலண்டன், நவ. 4—
அறுவைச் சிகிச்சைக்குப் பின், முழு உடல் நலம் பெற்றுத் தாயகம் திரும்பும் அறிஞர் அண்ணா அவர்கள் நேற்று இலண்டன் வந்து சேர்ந்தார்கள்.

அண்ணா அவர்களுடன், அண்ணியார், பரிமளம், டாக்டர் சதாசிவம், இரா. செழியன் எம்.பி., க. இராசாராம் எம்.பி. ஆகியோரும் வந்து சேர்ந்தனர்.

இலண்டன் விமான நிலையத்திலிருந்து இந்தியத் தூதர் இல்லத்திற்குச் சென்றனர்; கென்சிங்டன் பிளேஸ் என்னுமிடத்தில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. தாவன் அவர்களின் இல்லத்தில் அண்ணாவும், குழுவினரும் அவருடைய விருந்தினராகத் தங்கியிருக்கின்றனர்.

நாளை (நவ. 5) இலண்டனிலிருந்து புறப்பட்டு, பம்பாய் வழியாக நாளை மறுநாள் (நவ. 6) காலை 8-20 மணிக்குச் சென்னை வந்தடைவார்கள்.

### சென்னையில் வரவேற்பு

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சிறப்பான முறையில் வரவேற்பளிக்க, சென்னை மாவட்ட தி. மு. கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

சென்னைச் சீரணித் தொண்டர்களும் அணிவகுத்து நின்று வரவேற்பர்.

## நிஜலிங்கப்பாவின் சந்தர்ப்பவாதம்

### ஆர். ஆர். திவாகர் கண்டனம்

"இவ்வளவு பாடுகள் பட்டு மொழிவழி மாநிலங்களை அமைத்துவிட்டு, இப்பொழுது, சில தடைகள் உள்ளன என்கிற காரணத்திற்காக அவற்றை மாற்ற எண்ணுவது கோழைத்தனமாகும்"

(4-ம் பக்கம் பார்க்க)

## இலண்டனில் சத்தியவாணிமுத்து

இலண்டன், நவ. 3—
தமிழகச் செய்தித் துறையமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து இன்று இலண்டன் வந்து சேர்ந்தார். அவர் இங்கு ஒரு வாரம் தங்குவார்.

### பிரசேல்சில்

அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து பிரசேல்சில் உள்ள இந்தியத் தூதர் திரு. டி. சுவாமிநாதன் அளித்த விருந்தில் பெல்ஜிய டெலிவிஷன் நிறுவனத்தின் முக்கியஸ்தர்களையும் பட விநியோகஸ்தர்களையும் சந்தித்தார்.

நேற்று அவர் ஆம்ஸ்டர்டாமிலிருந்து பிரசேல்ஸ் வந்தார். இந்திய செய்திப் படங்கள், நகைகள், விரிப்புகள், பின்னல் வேலை செய்யப்பட்ட பட்டு ரகங்கள் போன்ற கைவினைப் பொருள்களையும் பெல்ஜியத்திற்கு விற்கலாமென அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அவருடன் சென்னை படத் தயாரிப்பாளர் திரு. கே. வெங்கட்ராமானுஜமும் வந்திருக்கிறூர்.

# அறிஞர் அண்ணா தாயகம் வருகை

## கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்

மருத்துவச் சிகிச்சை பெற்று அமெரிக்காவிலிருந்து நமது அறிஞர் அண்ணா அவர்கள் நவம்பர் 6-ல் தாயகம் திரும்புகிறூர்கள்!

நவம்பர் 6-ந்தேதி காலை 8-மணிக்கு அறிஞர் அண்ணா அவர்களை வரவேற்கவும் நமது மகிழ்ச்சியைத் தெரிவிக்கவும் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்குப் பெருந்திரளாக வருமாறு தோழர்களை விரும்பிக் கேட்டுக்கொள்கிறோம்.

விமான நிலையப் பாதைகளின் இருமருங்கிலும் அணிவகுத்து நின்று, திறந்த காரில் இல்லம் நோக்கி வரும் அண்ணா அவர்களுக்குத் தங்கள் மகிழ்ச்சியையும் வணக்கத்தையும் பூரிப்பையும் தெரிவித்துகொள்ள வேண்டுகிறோம்.

நெடுந்தொலைவு பயணத்தால் சோர்வுடன் வந்திறங்கும் அறிஞர் அண்ணா அவர்களுக்கு மாலைகள் அணிவிக்கவோ, அவர்களுடன் கை குலுக்கவோ, அருகில் சென்றும் உடலைத் தொட்டும் வணக்கம் செலுத்தவோ முயலவேண்டாம் என்றும் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு வரும் தோழர்களைப் பெரிதும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

**என். வி. நடராசன்,**
அமைப்புச் செயலாளர் தி.மு.க.

## பந்தயப்பணத்துக்கு வரி உயர்வு

கிண்டி போன்ற இடங்களில் நடக்கும் குதிரைப் பந்தயங்களில் பணயத் தொகை கட்டுவோர்மீது விதிக்கப்படும் வரியை 12.5 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதத்துக்கு தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

பந்தயம் நடக்கும் பகுதிக்குள் வேறு விதமாகப் பந்தயம் கட்டப்படும் பணத்துக்கும் இவ்வாறே வரி உயர்த்தப்பட்டுள்ளது.

சிறப்பு அரசிதழில் பந்தய வரிச் சட்ட அறிவிப்புக்குத் திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

# அண்ணாவுக்கு இல்லம்

## அமைப்புச் செயலாளர் பார்வையிட்டார்

அறிஞர் அண்ணா அவர்கள் மருத்துவர்கள் ஆலோசனைக்கேற்ப, உரிய வசதிகளோடு தங்கும் வகையில் அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் இதுவரை குடியிருந்த வீடு தக்க முறையில் திருத்தி அமைக்கும் பணிகள் முடிவடைந்துவிட்டன.

அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்களுடன், இன்று கழக அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் அவர்கள், இல்லத்தில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பார்த்தார்.

அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் அதே தெருவில் இருக்கும் 'திருவரங்கம்' எனும் வீட்டிற்கு நேற்று குடிபெயர்ந்தார்.

# சுதந்தர கேரளம்

## சோஷலிஸ்டுக் கட்சியினர் முழக்கம்!

திருவனந்தபுரம், நவ 3—
கேரள சோஷலிஸ்டுக் கட்சியின் திருவனந்தபுரம் மாவட்ட மாநாடு இன்று இங்கு நடைபெற்றது. மாநாட்டையொட்டி நடைபெற்ற ஊர்வலத்தில் சுதந்தரக் கேரள முழக்கம் எழுப்பப்பட்டது. 'கேரளம் கேரளருக்கே' என்று முழங்கினர்.

கேரள ஐக்கிய முன்னணி அமைச்சரவையில் இந்த சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த ஒருவரும் அமைச்சராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாட்டுயர்வுக்குக் கூட்டுறவே துணை

## தன்னலங் கருதாதவர்கள் முன்னின்று பாடுபட வேண்டும்

### மேலை நாடுகள் முன்னேறிய விதம் அறிவீர்

### கூட்டுறவு தின விழாவில் அமைச்சர் மா. முத்துசாமி விளக்கம்

சென்னை, நவ. 3—

"கூட்டுறவுத் துறையின் உயர்வு பற்றி வளர்ந்து வருகின்ற இந்த சனநாயக யுகத்தில் எடுத்துச் சொல்லித் தெரியவேண்டிய நிலையில்தான் நம் நாடு இருக்கிறது. ஆனால் வெளிநாட்டிலே கூட்டுறவுத் துறை மிக உயர்வாகப் போற்றப்படுகிறது. அந்தத் துறையை வைத்துத்தான் அந்நாடுகள் முன்னேற்றம் அடைகின்றன! நான் அண்மையில் வெளிநாடு சென்றிருந்தபோது வேளாண்மைத்துறை— பொருளாதாரத்துறை---- அரசியல்துறை ஆகிய பல துறைகளில் அந்த நாடுகள் முன்னேற்றம் அடைந்திருப்பதைக் கண்டேன். அதற்குக் காரணம் கூட்டுறவுத் துறைதான். எந்தத் துறையும் அங்கே கூட்டுறவு முறையில்தான் நடைபெறுகிறது"

என்று, உள்ளாட்சித் துறை யமைச்சர் மா. முத்துசாமி அவர்கள் இங்கு பேசுகையில் கூறினர்.

இன்று மாலை 6 மணியளவில் சைதை டாடண்டர் நகர் கூட்டுறவுப் பண்டகசாலையின் ஆதரவில் நுகர்வோர் தினம் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் கொண்டாடப்பட்டது. இக்கொண்டாட்ட விழாவிற்கு அமைச்சர் முத்துசாமி தலைமை வகித்தார். தமிழகக் கூட்டுறவுத் துறைப் பதிவாளர் நரசிம்மனும் இவ்விழாவில் கலந்துகொண்டார்,

அமைச்சர் முத்துசாமி மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"சில ஆண்டுகளுக்கு முன் இந்தக் கல்லூரியில் மாணவனாக இருந்தபோது இதே கூட்டுறவுப் பண்டகசாலையில் நுகர்வோனாக இருந்தேன். அதனால் பண்டங்கள் வாங்கிப் பயன்படுத்துவதில் உள்ள சிரமம் எனக்கு நன்றாகத் தெரியும். எனவேதான் இவ்விழாவிற்கு என்னை அழைத்திருப்பதாகக் கருதுகிறேன்.

இந்தக் கல்லூரியில் நான் படிக்கும்பொழுது இதே அரங்கத்தில் பேச்சுப்போட்டி நடைபெற்றது.

எனக்குக் கொடுத்த தலைப்பு 'நான் முதலமைச்சரானால்...' என்பது. அப்பொழுதும் நான் இதே இடத்தில் நின்றுகொண்டுதான் பேசினேன். அந்தப் பேச்சுப் போட்டியில் எனக்குத்தான் முதல் பரிசு கிடைத்தது. அன்று நான் பேசுகிறபோது தமிழகத்தின் அமைச்சனாக வருவேன் என்று நினைக்கவில்லை. அதுவும் ஆசிரியராக இருப்பவர்கள் அன்றிருந்த சூழ்நிலையில் அமைச்சர்களாக வருவோமென்று எண்ணிப்பார்க்கக்கூட முடியாமலிருந்தது.

ஆனாலும் மேடையிலே 'நான் முதலமைச்சரானால்' என்ற தலைப்பில் மேடையிலாவது அமைச்சராக இருக்கலாமே என்று கருதிப் பேசினேன். இன்று நான் அமைச்சராகிவிட்டேன். அதனால் இந்த இடத்தில் நின்று பேசும் எல்லாக் காரியங்களும் நிறைவேறும் என்று நினைக்கிறேன்.

சோவியத் இரஷ்யா, கிழக்கு ஜெர்மன் போன்ற நாடுகள் உலகப் போருக்கு முன்னால் சீரழிந்த நிலையில் இருந்தன. இரஷ்ய நாட்டிலே 1917-ம் ஆண்டிலே கொடுங்கோல் முறை ஒழிக்கப்பட்டது. அதிலிருந்து இன்று வரை ஐம்பதே ஆண்டுகளுக்குள் உலகம் வியக்கும் ஒப்பற்ற நாடாக அது உயர்ந்திருக்கிறது.

ஒரு நாட்டைப் பொறுத்தவரை ஐம்பது ஆண்டுகள் என்பது மிகக் குறுகிய காலம். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் உண்ண உணவின்றித் துன்பப்பட்ட இரஷ்யர்கள் இன்று உலகத்திற்கே வழிகாட்டிகளாக இருக்கிறார்களென்றால் அவர்களது கூட்டு முயற்சிதான் காரணம்.

இரஷ்ய நாட்டிலுள்ள வால்காகிராடு நகரம் இரண்டாம் உலகப் போரில் சின்னாபின்னப் படுத்தப்பட்டது. அந்நகரிலிருந்த 42 ஆயிரம் வீடுகளை இட்லர் ஆட்சி தரைமட்டமாக்கியது. ஆனால் உள்ளந்தளராது கூட்டு முயற்சியில் அந்நாட்டு மக்கள் இறங்கியதால் இன்று பல்லடுக்கு மாளிகைகள் -- பார்த்தவர் வியக்கும் மாடங்கள் நிறைந்த சொர்க்க பூமியாகக் காட்சி தருகிறது.

இரஷ்ய நாட்டிலுள்ள மக்கள் தொகை அந்நாட்டின் பரப்பளவைக் கொண்டு பார்த்தால் மிகக் குறைவு. ஆண்டுக்கு ஒரு முறை சாகுபடி செய்யும் நிலங்கள்தான் அங்கே இருக்கின்றன. சாகுபடிக் காலம் தவிர மற்றக் காலங்களில் எல்லாம் அவ்வயல்கள் பனி மூடிக் கிடக்கின்ற பனிப் பிரதேசமாகக் காட்சி தரும். அதுவும் தவிர, பாலைவனங்கள் ஒருபக்கம் அவர்களுக்குத் துன்பங் கொடுக்கின்றன. அப்படி இருந்தும் 95-சதவிகித உணவுப் பொருள்களை அவர்களே உற்பத்தி செய்கின்றனர். 5-சதவிகிதப் பொருள்களைத்தான் வேறு நாட்டிலிருந்து அதுவும் இவர்கள் பொருளைக் கொடுத்து அதற்குப் பதிலாகத் திருப்பிப் பெறுகிறார்கள்.

உணவுத் துறையில் மட்டுமின்றி தொழில் துறையிலும் கூட்டுறவு முறையில் அந்நாடு முன்னேறியிருக்கிறது. அந்நாட்டிற்கு நான் சென்றிருந்தபோது ஒரு டிராக்டர் தொழிற்சாலையைப் பார்த்தேன். 12-ஆயிரம் தொழிலாளர்கள் அங்கு வேலை செய்கிறார்கள். அதில் ஏழாயிரம்பேர் பெண்கள். ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமாக— இன்னின்ன வேலைதான் தங்களுக்கென்று ஒதுக்காமல் கூட்டுறவு முறையில் எல்லா வேலைகளையும் பார்க்கிறார்கள். அந்த டிராக்டர் தொழிற்சாலை 1933-ம் ஆண்டில் நிறுவப்பட்டது. ஆனால் 1942-ம் ஆண்டில் இரண்டாம் உலகப் போரில் பல பகுதிகள் நிர்மூலமாக்கப்பட்டன. ஆனால் ஒரே ஆண்டில் அழிந்த பகுதிகளைக் கட்டி முடித்து இன்று சிறப்போடு நடைபெறுகிறது.

இந்தத் தொழிற்சாலையில் 68 ஆயிரம் டிராக்டர்கள் ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. உற்பத்தியாவதில் 90 சதவிகிதம் அந்நாட்டின் வேளாண்மைத் துறைக்கே பயன்படுகின்றது. 10 சதவிகிதம்தான் வெளிநாடுகளுக்கு அதுவும் 18 நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

இதேபோல கிழக்கு ஜெர்மனியிலும் கூட்டுறவுப் பண்ணை முறைகளை ஊக்குவிக்கிறார்கள். ஆனால் நம் நாட்டிலேதான் கூட்டுறவு முறை தளர்ச்சி பெற்றிருக்கிறது.

அரசாங்க ஆதரவு இருந்தால் மட்டும் இம்முறை வெற்றி பெறாது. பொதுமக்களும் இத்துறையில் பங்கு பெற்று இருப்பவர்களும் உதவியாக இருந்தால்தான் இம்முறை வெற்றி பெறும். இதிலுள்ள உறுப்பினர்கள் சுயநலத்திற்குத் தங்களை ஆட்படுத்திக் கொள்வதால் இந்தத் துறைக்குச் சீரழிவும் பொதுமக்கள்பால் வெறுப்பும் ஏற்பட்டிருக்கிறது.

பொதுமக்களுக்கு சேவை செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது என்று கூட்டுறவுத் துறையிலுள்ளவர்கள் கருதினால்தான் இது நம் நாட்டில் வெற்றி பெற முடியும். சில தன்னலவிரும்பிகளால்தான் இத்துறைக்கு களங்கம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் மக்களுக்கு சலிப்பும் ஏற்பட்டிருக்கிறது.

அதையெல்லாம் சீர்செய்யும் பொறுப்பை இந்த அரசு ஏற்றுள்ளது. நாட்டில் எந்தத் துறையானாலும் அந்தத் துறையை கூட்டுறவுத் துறை மூலம் செய்யவே இந்த அரசு விரும்புகிறது.

கூட்டுறவு பண்டகசாலையில் 'நுகர்வோர்' என்று தனிப்பட்டு இலாபம் அடைபவர்கள் கிடையாது. எல்லாரும் முதலீடு செய்கிறார்கள்; அத்தனை பேருமே பயன் பெறுகிறார்கள்.

எதற்குமே விளம்பரம் செய்யும் சூழ்நிலையில்தான் இந்திய நாடு இருக்கிறது. விளம்பரம் செய்தால்தான் மக்கள் கவனத்திற்கு அது வருகிறது. அந்த முறையில் 'நுகர்வோர் தினம்' என்றும், 'சிறுவர்கள் தினம்' என்றும் இது நடைபெறுகிறது. மக்கள் ஆதரவு இருந்தால்தான் இது வெற்றி பெறமுடியும்."

## கூட்டுறவு முறை மூலம் விவசாயப் பண்ணை

### அமைச்சர் செ. மாதவன் கருத்து

சென்னை, நவ. 2—

"கூட்டுறவு பாங்குகள் சிறு தொழில்களுக்கு மட்டும் உதவி செய்வதுடன் நிறுத்திக்கொள்ளக் கூடாது; நடுத்தரத் தொழில்களுக்கும், பெரிய தொழில்களுக்கும் நிதி உதவி செய்ய வேண்டும்"

என்று, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஆதரவில் நடைபெறும் அனைத்திந்திய கூட்டுறவு வாரத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில், கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. செ. மாதவன் குறிப்பிட்டார்.

கூட்டுறவு இயக்கத்தின் மகத்தான நன்மைகளில் அமைச்சர் மாதவன் மிகவும் நம்பிக்கை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"கூட்டுறவுப் பண்ணையை நடத்துவதற்குக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தலாம்; இந்த ஏற்பாடு அமுலாவதற்கு நிலங்கள் துண்டு துண்டாக இருப்பதே பெரிய முட்டுக்கட்டையாக அமைந்திருக்கின்றன. துண்டு நிலங்களை ஒன்று சேர்க்கவேண்டும். இந்த விஷயத்தில் எனது சொந்தக் கருத்தையே தெரிவிக்கிறேன். சிரமம் இல்லாமல் இந்தத் திட்டத்தை அமுல் நடத்தமுடியும். ஒரு ஏரிப் பாசனத்தில் 200 ஏக்கரா நிலம் 150 பேருக்குச் சொந்தமாக இருப்பதாக வைத்துக்கொள்வோம். ஏதேனும் ஓர் ஏற்பாட்டைச் செய்துகொண்டு, நிலச் சொந்தக்காரர்கள் கூட்டு விவசாயம் செய்யலாம். அவர்கள் தமது நிலங்களை விற்பனை செய்ய விரும்பினால் கூட்டு விவசாய சங்கத்திற்கே விற்றுவிடலாம்."

"கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகவே நாட்டில் சோஷலிச பாணியில் சமுதாயத்தை அமைக்க முடியும்."

தமிழ்நாடு கூட்டுறவு சங்கத்தின் தலைவரான ஆர். கனகசபை எல்லோரையும் வரவேற்றார். செயலாளர் டாக்டர் பி. நடேசன் நன்றி கூறினர்.

டில்லியில் உள்ள தேசியக் கூட்டுறவு சங்கத்திற்குத் தமிழ்நாடு கூட்டுறவு சங்கத்தின் பிரதிநிதிகளாக டாக்டர் பி. நடேசன், எம். வி. சதாசிவம், முத்துசாமி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## தஞ்சை மாவட்டத்துக்குப் பாராட்டு!

### இந்தியாவிலேயே முன்னணியில் கூட்டுறவுப் பணி

### நெல் கொள்முதலிலும் சிறந்து விளங்குகிறது

சென்னை, நவ. 2—

"தஞ்சை மாவட்டத்தில் தற்போது நடைபெறும் நெல் கொள்முதல் வேலைகள் என்னைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றன" என்று, இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநரான எல். கே. ஜா, செய்தியாளரிடம் கூறினர்.

தஞ்சை மாவட்டத்தின் நிலைமைகளை அறிவதற்கென குறுகிய காலச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்த அவர், இன்று காலை சென்னை திரும்பினர்.

தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் வேலையில் ஈடுபட்டிருக்கும் கூட்டுறவுத் துறையாளரின் வேலைத் திறமை பற்றியும், சிறப்பு பற்றியும் அவர் பெரிதும் பாராட்டிப் பேசினர்.

அவர் மேலும் தெரிவித்த கருத்துக்களாவன:—

"இந்தியாவில், கூட்டுறவுத் துறையில் சில இடங்களிலேயே நல்லபடியான வேலைகள் நடைபெறுகின்றன; அந்தச் சில இடங்களில் இந்தப் பகுதியும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

"தஞ்சை மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையினர் எல்லா அலுவல்களிலும் சிறப்பாகச் செயல்படுகிறார்கள்; நெல் கொள்முதல் செய்வதிலும் அதைக் காயவைப்பதிலும் தரம் பிரிப்பதிலும், வேக வைப்பதிலும், அரைப்பதிலும், அதை விற்பனைக்குக் கொண்டுவருவதிலும் ஆக எல்லா வகையிலும் சரியான முறையிலும் -- தொழில் நுணுக்கத் திறனோடு ஒவ்வொன்றையும் கவனித்துச் செயல்படுகிறார்கள்.

"இங்கு கூட்டுறவுத்துறை மூலம் இயங்கும் -- நெல் காயவைக்கும் நவீன ஆலையில் ஏராளமான நெல் வந்து குவிந்துகொண்டிருக்கிறது.

"இங்கு கூட்டுறவுத் துறை மூலம் கடன் தரும் வேலைகள் சிறப்பாக அமைந்துள்ளன; அது, நெல் கொள்முதலுக்குக் குறிப்பிடத்தக்க அடிப்படையாகி சிறப்பாக விளங்குகிறது.

"இங்கு அரிசி ஆலைகளிலிருந்து கிடைக்கும் தவிடு எண்ணெய் எடுப்பதற்குப் பயன்படும் முறையும் மிகவும் பாராட்டத்தக்க முறையாகும்."

## நம்பிக்கையான துணைவனாக வேண்டும்

### தலைமையமைச்சர் செய்தி

புதுடில்லி, நவ. 3—

"கூட்டுறவு இயக்கம் சிறிய மனிதனின் நம்பிக்கையான துணைவனாக வேண்டும்" என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி கூறியிருக்கிறார்.

அனைத்திந்தியக் கூட்டுறவு வாரம், நவம்பர் 2-ம் தேதி முதல் கொண்டாடப்படுவதை யொட்டி தலைமையமைச்சர் செய்தியொன்று விடுத்திக்கிறார். அதில் அவர் கூறியிருப்பதாவது:—

"விவசாய முன்னேற்றத்துக்குக் கூட்டுறவு இயக்கம் சிறப்பான பங்கு ஆற்றியிருக்கிறது.

"விவசாயத் துறையில் ஏற்பட்டுள்ள பயன்களை உறுதிப்படுத்தும் பணியில் மட்டுமின்றி கிராம ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்கு உள்ளார்ந்த முயற்சியையும் இந்த இயக்கம் மேற்கொள்ள வேண்டும். சிறிய மனிதனின் நம்பிக்கையான துணைவனாக அது ஆக வேண்டும்."

# சென்னையில் 'யேல்' நினைவுக் கூடம்

## செஸ்டர் பௌல்ஸ் திறந்தார்

சென்னை, அக். 31—

சென்னை கோட்டையிலுள்ள செயின்ட் மேரி தேவாலயத்தில், தமிழக முன்னாள் கவர்னர் யெலிஹு யேல் நினைவாக வரலாற்றுக் கூடம் ஒன்றை இன்று மாலை அமெரிக்கத் தூதர் செஸ்டர் போல்ஸ் திறந்துவைத்தார்.

அமெரிக்காவிலுள்ள யேல் பல்கலைக் கழகத்துக்கு முதன் முதலில் பெருமளவில் பொருள் உதவி செய்தவர் யேல்; மரியன்னை தேவாலயம் நிறுவப்படுவதற்குத் துணை செய்தவரும்கூட. அப்போது அவர் தமிழகத்தில் பிரிட்டிஷ் கவர்னராக இருந்தார்.

தேவாலயத்தில் நடைபெற்ற திறப்பு விழாவில் தூதர் போல்ஸ் பேசுகையில், யேல் பல்கலைக் கழகம் தனது 250-வது பிறந்த நாளைக் கொண்டாடிவரும் இத்தருணத்தில் இந்த வரலாற்றுக் கூடத்தைத் திறந்து வைப்பது பொருத்தமானது என்றார் இந்த ஆண்டுத் துவக்கத்தில் இக்கொண்டாட்டத்தை ஒட்டி தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் யேல் பல்கலைக் கழகம் சென்றது பற்றியும், அங்கு அவர் பெரிதும் வெற்றிமிக்க சொற்பொழிவுகள் நிகழ்த்தியது பற்றியும் தூதர் நினைப்பூட்டினார்.

யெலிஹு யேல் நியூ இங்கிலாந்தில் பிறந்தவர் என்றும், தம் வாழ்நாளில் பெரும் பகுதியும் சென்னையில் கழித்தவர் என்றும் அமெரிக்கத் தூதர் கூறினார். தாம் யேல் பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர் என்ற முறையில், இந்த உறவை உறுதிப்படுத்துவது தமக்குச் சிறப்பாக மகிழ்ச்சியளிக்கிறதென்று கூறினார்; இந்த உறவு தொடர்ந்து வளர்ந்தோங்குமென நம்பிக்கை தெரிவித்தார்.

பின்னர், வரலாற்றுக் கூடத்தில் நினைவுப் பட்டயம் ஒன்றைத் தூதர் போல்ஸ் திறந்து வைத்தார்.

"1687 முதல் 1692 வரை செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் கவர்னராகவும், செயின்ட் மேரி தேவாலயத்தின் கணக்கராகவும் பொருளாளராகவும் இருந்த யெலிஹு யேல் அவர்களைக் கவுரவிப்பதற்காக யேல் கல்லூரிக்கு அவர் பெயர் சூட்டப்பெற்ற 250-வது ஆண்டு விழா நினைவாக இது பதிக்கப்படுகிறது. 1924-ல் யேலில் செஸ்ட்டர் போல்ஸ்கூடப் படித்தவர்கள், தேவாலயத்தில் நிலையான முன்னேற்றங்கள் செய்வதற்காக நன்கொடைகள் வழங்கியுள்ளனர்" என்று பட்டயத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

பட்டயத்தோடுகூட, வரலாற்றுக் கூடத்தில் யேலின் உருவப் படமும், யேல் மகனுடைய கல்லறையின் மெருகுச் சித்திரம் ஒன்றும் (இது, திருமதி ராபர்ட் டபிள்யூ. கால்டுவெல் தீட்டியது), யேல் காலம் முதல் இருந்துவரும் பழைய பத்திரங்கள் அடங்கிய பெட்டி ஒன்றும் காட்சியில் வைக்கப் பெற்றுள்ளன.

# அமெரிக்கவானொலியில் தமிழ் ஒலிபரப்பு

## நேரம் மாறுகிறது

வாஷிங்டன், நவ. 1—

'வாய்ஸ் ஆப் அமெரிக்கா' நாள்தோறும் ஒலிபரப்பி வரும் தமிழ் நிகழ்ச்சிகளை நவ. 3-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை முதல், இரவு 8-30 மணி முதல் 9-மணி வரையில் கேட்கலாம். 13, 19, 25, 41 மீட்டர் அலைவரிசைகளில் தமிழ் நிகழ்ச்சி ஒலிபரப்பாகும்.

இது அரைமணி நேர நிகழ்ச்சி. செய்தி அறிக்கை; கருத்துரைகள்; அமெரிக்காவிலும் உலகம் நெடுகிலுமுள்ள நிருபர்களிடமிருந்து அறிக்கைகள்; விஞ்ஞான, பண்பாட்டு, பொருளாதார, சமுதாயக் கட்டுரைகள் ஆகியன நிகழ்ச்சியில் இடம் பெறும்.

நவம்பர் 6-ஆம் நாள் அமெரிக்க நாட்டு அதிபர் தேர்தல் பற்றி ஒரு சிறப்பு நிகழ்ச்சி ஒலிபரப்பாகும்.

## மாஜிஸ்திரேட் பதவி நீக்கம்

பம்பாய், நவ. 1—

பம்பாயின் அண்மைக்கால வரலாற்றிலேயே முதன்முதலாக மாகாண மாஜிஸ்திரேட் ஒருவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்.

ஜே. எஸ். தாவ்தா என்ற அந்த மாஜிஸ்திரேட்மீது மகாராஷ்டிர மாநில அரசுக்கு புகார்கள் வந்தன.

அந்தப் புகார்களின்மீது விசாரணை நடத்தும் பொருட்டு, பம்பாய் உயர்நீதிமன்ற நீதிபதியான டி. ஜி. பலேகார் என்பவரை அரசு நியமித்தது. அந்த நீதிபதி விசாரணை நடத்தி அளித்த அறிக்கையையொட்டிய மாஜிஸ்திரேட் பதவியிலிருந்து தாவ்தா நீக்கப்பட்டார்.

## மண்வள—நீர்வள ஆய்வு

### அமெரிக்காவில் இந்தியக்குழு

டென்வர், கொளராடோ, நவ. 1—

"ஒவ்வொரு துளி நீரையும் மிக அதிகபட்சமாகப் பயன்படுத்தல் வேண்டும்; அதேபோல் ஒவ்வோர் ஏக்கர் நிலமும் பயன்படுத்தப்பட வேண்டும்" என்பதற்கான வழிவகைகளை அமெரிக்காவிலே ஆராய்ந்து வருகிறது இந்திய மண்வள நீர்வளப் பாதுகாப்புக் குழு ஒன்று.

யு. எஸ். ஏ ஐ. டி. என்ற அமெரிக்க அரசு வளர்ச்சிப் பணி உதவி நிலையமும் இந்திய அரசும் கூட்டாக இக்குழுவின் பயணத்துக்கு ஏற்பாடு செய்தன. மாநில, மத்திய அரசு அதிகாரிகள் ஆறு பேர் கொண்டதாகும் இக்குழு.

# வரலாற்றுப் புகழ் படைத்த தஞ்சைப் பெரிய கோவில்

## மத்திய அரசின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க முயற்சி

### இராஜராஜன் விழாவில் அமைச்சர் நெடுஞ்செழியன் அறிவிப்பு

தஞ்சை, நவ 2—

"இங்குள்ள வரலாற்றுப் பெருமைமிக்க பெரிய கோவிலையும் திருச்சி மாவட்டத்தில் கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள கோவிலையும் மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறை அதிகாரத்திலிருந்து விடுவிக்கவேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறது" என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் நேற்றிரவு இராச ராச சோழனின் பிறந்த நாள் கொண்டாட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் தெரிவித்தார். இராச ராச சோழனின் மாபெரும் மாண்புகளையும் வருங்காலச் சந்ததிகளுக்கு அவர் புரிந்துள்ள பணிகளையும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

மேற்கூறிய 2 வரலாற்றுப் பெருமைவாய்ந்த கோவில்களையும் பாதுகாப்பது மிகவும் முக்கியம் என்று அவர் கூறினார்.

தஞ்சைப் பெரிய கோவிலைப் புதுப்பிப்பதற்கு உதவுமாறு தமிழக அரசு 'யுனெஸ்கோ'வைக் கேட்டுக்கொண்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இராச ராச சோழன் நன்கொடையாக வழங்கிய ஏராளமான சொத்துக்கள் மறைந்து விட்டதைப் பற்றியும் அமைச்சர் வருத்தம் தெரிவித்தார். தஞ்சையில் இராச ராச சோழனுக்குச் சிலை வைக்க வேண்டும் என்று யோசனை கூறினார். கங்கை கொண்ட சோழபுரம் ஆலயத்தை அமைத்த இராசேந்திர சோழனின் (இராச ராச சோழனின் மகன்) பிறந்த நாளையும் கொண்டாட வேண்டும் என்று கூறினார்.

# உலகம் பிறந்தது எப்படி?

## ஆராய விண்வெளியில் ஆய்வுக் கூடம்

வாஷிங்டன், நவ. 2—

நம்பமுடியாத அளவுக்குச் செறிவு மிகுந்த ஒரே ஓர் அணு 'படார்' என்று வெடித்து இன்றைய மாபெரும் விண்மீன் கூட்டங்கள் படர்ந்த இந்த உலகம் மலர்ந்ததா அல்லது வானத்தில் பழைய விண்மீன்கள் தீயத் தீயப் புதிய விண்மீன்கள் உருவாகின்ற இன்றைய நிலையிலேயே முதலிலிருந்து இருந்ததா?

உலகம் எல்லை உள்ளதா, எல்லை அற்றதா? கால வரம்பும் இட வரம்பும் உள்ளதாயின் உலகின் வயது என்ன, அதன் எல்லை எவ்வளவு தொலைவில் உள்ளது.

இன்றைய விண்மீன்களில் பெரும்பாலானவை இளம வயதினவா? ஒரு விண்மீன் பிறந்து வளர்ந்து மறையும் காலச் சுழல் யாது?

சிந்தனையைக் கிளறும் இந்த விஞ்ஞானக் கேள்விகளுக்குச் சரியான விடை காணக்கூடிய வாய்ப்பு ஒரு புதிய அமெரிக்க வானாய்வுக் கூடத்தினால் வானியல் அறிஞர்களுக்கு முதல் தடவையாக இப்போது கிடைக்க இருக்கிறது. இந்தப் புதிய வானாய்வுக் கூடம் இதுவரை விண்வெளியில் செலுத்தப்பட்ட எந்த விண்வெளிக் கோளையும் போன்றது அல்ல.

புதிய வானாய்வுக் கூடம் 2.2 டன் எடை உள்ளதாக இருக்கும் அதிலுள்ள டெலஸ்கோப்புகள் ஒளியினால் மட்டும் காண்பவை அல்ல; மின்காந்த அலை மாலை முழுவதையும் பயன்படுத்திக் காண்பவையாகும்; அதாவது, ஊதா மேற்கதிர், சிவப்பின்கீழ்க் கதிர், எக்ஸ்-ரே, காமா கதிர் முதலிய கண்ணுக்குத் தெரியாத கதிர்கள் வழியாகவும் கண்டுகொள்பவையாகும். இதனால் கண்ணுக்குத் தெரியும் பகுதியைவிட ஆயிரம் மடங்கு அதிகமாக இவை காணும். இப்படி இந்த வானாய்வுக் கூடச் செயற்கைக் கோளில் பதினொரு டெலஸ்கோப்புகள் இருக்கும். இவற்றுள் மிகப் பெரிய டெலஸ்கோப்பு 16 அங்குல அளவுள்ளதாகும்.

வலம்வரும் வானியம் வானாய்வுக் கூடம்—2 (ஓ. ஏ. ஓ.—2) என்பது இந்தப் புதுமைச் செயற்கைக் கோளின் பெயர். இது நவம்பர் 12-ஆம் நாள் கென்னடி முனையிலிருந்து ஆற்றல்மிக்க அட்லாஸ்-சென்டார் ஏவுகணைமூலம் விண்வெளியில் செலுத்தப்படும் என்று அமெரிக்க விண்வெளி நிலையம் (நாசா) வெள்ளிக்கிழமை அறிவித்தது. இது பூமியை 480 மைல் உயரத்தில் வட்டவடிவமான பாதையில் வலம் வரவேண்டும் என்பது திட்டம்.

ஓ. ஏ. ஓ.—1 என்ற இத்தகைய வானாய்வுக்கூடம் ஒன்று 1966 ஏப்ரல் திங்கள் செலுத்தப்பட்டது. ஆனால் அது தோல்வியுற்றது. ஓ. ஏ. ஓ.—2 அனுப்பப்பட்ட பிறகு 1969-ல் ஒன்றும் 1970-ல் ஒன்றுமாக மேலும் இரண்டு அனுப்பத் திட்டமிட்டுள்ளனர்.

தானே இயங்கும் கருவிகள் இந்தச் செயற்கைக் கோளைப்போல் வேறு அமெரிக்கச் செயற்கைக் கோள எதிலும் இவ்வளவு இருந்ததில்லை என்றும், இவ்வளவு கனமான அமெரிக்கச் செயற்கைக் கோளும் வேறு இல்லை என்றும் நாசா தெரிவித்தது. அம்புலியில் சென்று மெதுவாக இறங்கிப் படம் பிடித்ததும், மண்ணைத் தோண்டியும், அதை ஆராய்ந்தும் தகவல் அனுப்பிய சர்வேயர் என்ற அமெரிக்கச் செயற்கைக் கோள்களைக் காட்டிலும் மூன்று மடங்கு சிக்கல் மிக்கது புதிய வானாய்வுக்கூடச் செயற்கைக் கோள்.

புதிய செயற்கைக் கோள் எட்டுப் பக்கங்கள் கொண்ட ஓர் உருளை போன்றது; உயரம் 10 அடி. அதன் வெயில் விசை மின்கலத் துடுப்புகளை விரித்த நிலையில் அகலம் 21 அடி.

அதிலுள்ள டெலஸ்கோப்புகள், மற்றும் கருவிகள் எல்லாம் மொத்தம் 1,000 ராத்தல் எடை உள்ளவை இவ்வளவு கனமான கருவிகள் ஆளில்லாத எந்த அமெரிக்கச் செயற்கைக் கோளிலும் இதற்குமுன் அனுப்பப்படவில்லை.

ஓ ஏ.ஓ கோள் சரிவர உதவுவதற்கு அச்சாணி போன்றவை அதிலுள்ள ஆறு சிறு டெலஸ்கோப்புகள். இவை தாமாகவே குறிப்பான சில நட்சத்திரங்களை நோக்கித் திரும்பி எப்போதும் அவற்றைப் பார்த்தவண்ணமே அமையும். 500 அடி தூரத்தில் உள்ள ஒருவரது இடது கண்ணையும் வலது கண்ணையும் வேறு வேருகக் காண்பதுபோல, அவ்வளவு துல்லியமாக இந்த டெலஸ்கோப்புகள் மேற்சொன்ன நட்சத்திரங்களைக் குறி பார்த்து இருக்கும்; அதாவது, வில்லில் ஒரு கலை (மினிட்) அளவு துல்லியமாக இருக்கும். இவ்வாறு இடையறாது துல்லியமாக நோக்காவிடில் தனித்தனி விண்மீன்கள் பற்றித் தேவையான தகவல்களைத் திரட்ட முடியாது.

# அமெரிக்காவில் அதிகார மாற்றம்!

## 9 இலட்சம் டாலர் செலவில் ஏற்பாடு

வாஷிங்டன், அக். 31—

**வரும் செவ்வாய்க்கிழமை தேர்ந்தெடுக்கப்படும் புதிய குடியரசுத் தலைவரின் கைக்கு ஜான்சன் ஆட்சியிடமிருந்து ஒழுங்காக அதிகாரத்தை மாற்றிக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் இப்போதே துவங்கிவிட்டன.**

**வரப்போகும் குடியரசுத் தலைவருக்கும் துணைத் தலைவருக்கும் அவரவர் அலுவலக ஊழியர்களுக்கும் தேவைப்படும் அலுவலகங்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டுவிட்டன.**

**அதிகார மாற்றச் செலவுக்கு மத்திய சட்டமன்றம் 9 இலட்சம் டாலர் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறது.**

**அதிகார மாறுதலுக்கான இடைக்காலம் எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுதுதான் ஏற்படுகிறது. நவம்பரில் தேர்தல் நடந்து புதிய தலைவர் சனவரி 20-ல் பதவி ஏற்பதற்கு நடுவிலுள்ள காலந்தான் இந்த இடைக்காலம்.**

அதிகார மாற்றச் செலவுக்கு மத்திய சட்டமன்றம் பணம் ஒதுக்கியிருப்பது 1964-ல் நிறைவேறிய ஒரு சட்டத்தின்படியே ஆகும். தேர்தலுக்கும் பதவி ஏற்புக்கும் இடைப்பட்ட காலத்தில், "மத்திய அரசின் உள்நாட்டு — வெளிநாட்டு விவகாரங்களை நடத்தி வைப்பதிலும் சட்டங்களைத் தவறாமல் நிறைவேற்றி வைப்பதிலும்" இடைவிட்டுப் போகாமல் தொடர்ந்து ஆட்சி நடைபெறுவதற்காக இந்த அதிகார மாற்றச் சட்டம் இயற்றப்பட்டது.

அதற்கு முன்பெல்லாம் அதிகார மாறுதலுக்கான செலவைப் பெரும்பாலும் புதிய தலைவரும் அவரது கட்சியும் ஆட்சிக் குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுமே ஏற்று வந்தனர்.

குடியரசுக் கட்சி சார்பில் ரிச்சர்டு எம். நிச்சன், சனநாயகக் கட்சி சார்பில் ஹியூபர்ட் எச். ஹம்ப்ரி, சுயேச்சையாக ஜார்ஜ் சி. வாலஸ் ஆகிய மூவரும் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு நிற்பது தெரிந்ததே.

மத்திய சட்டமன்றம் ஒதுக்கிக் கொடுத்துள்ள 9 இலட்சம் டாலரில், வெளியேறும் துணைத் தலைவர், புதிய துணைத் தலைவர் இருவருக்கும் ஆளுக்கு 75,000 டாலரும், வெளியேறும் தலைவருக்கும், புதிய தலைவருக்கும் ஆளுக்கு 3,75,000 டாலரும் கொடுப்பதென்று தற்காலிகமாக முடிவு செய்திருக்கிறார்கள்.

### முட்டுக்கட்டை ஏற்பட்டால்

நவம்பர் 5-ம் நாள் தேர்தலில் வெற்றிபெறுவதற்கு வேண்டிய 270 தேர்தல் குழு வாக்குகள் எந்த வேட்பாளருக்கும் கிடைக்காமல் போனால், அந்த முட்டுக்கட்டை தீரும்வரை அதிகார மாற்றச் சட்டம் செயலுக்கு வராது.

இதற்கிடையில் குடியரசுத் தலைவர் மாளிகைக்கு அருகே உள்ள இரண்டு மத்திய அரசுக் கட்டடங்களில் புதிய தலைவருக்கும் துணைத் தலைவருக்கும் இடைக்கால அலுவலகங்கள் அமைக்க ஏற்பாடாகியுள்ளது.

குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் சனவரி 20-ல் பதவி ஏற்பதற்குமுன் இருக்கும் 76 நாட்களில் தமது ஆட்சிக் குழுவினரையும் மற்றும் பல உயர் அதிகாரிகளையும் தேடிப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

### பதவிப் பட்டியல்

இதற்கு உதவியாக குடியரசுத் தலைவர் ஜான்சன் என்னென்ன பதவிகளைப் புதியவர் நிரப்ப வேண்டும் என்றும், அப்பதவிகளின் பொறுப்புக்கள் என்னென்ன என்றும் ஒரு பட்டியல் தயாரித்து வருகிறார்.

புதிய தலைவரும் துணைத் தலைவரும் இடைக்காலத்தில் அமைக்கும் அவரவர் அலுவலகங்களின் ஊழியர்களுக்கும், அவர்கள் அமர்த்திக் கொள்ளும் ஆலோசகர்களுக்கும், அவர்கள் ஏற்பாடு செய்துகொள்ளும் நிலையங்களுக்கும் ஆகும் செலவுகள் அதிகார மாற்றச் செலவுத் தொகையிலிருந்து கொடுக்கப்படும். மற்றும் பயணச் செலவு, அஞ்சல், தந்தி, டெலிபோன் செலவுகள் முதலியவற்றுக்கும் பணம் கொடுக்கப்படும்.

வெளியேறும் அதிகாரிகளின் அஞ்சல் செலவு, பத்திரங்களை இடம் மாற்றுவதற்கான செலவு, அவர்கள் புதிய அலுவலகங்கள் அமைப்பதற்கான செலவு முதலியனவும் அதிகார மாற்றச் செலவுத் தொகையிலிருந்து கொடுக்கப்படும்.

# சென்னையில் புதிய மேம்பாலம்

## போலீசுக் கமிஷனர் தகவல்

சென்னை, நவ. 1—

ஜார்ஜ் டவுன் பழ மார்க்கெட்டிற்கு அருகில் சாலையைக் கடக்க விரைவில் ஒரு மேம்பாலம் கட்டும் வேலை துவங்கும் என்று போலீஸ் கமிஷனர் இன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அந்த வகைக்காகப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நகரச் சாலைகள் மேம்பாட்டுப் பணிகளுக்காக திட்டமிடும் குழுவின் கூட்டம் புதனன்று நடைபெற்றபோது மன்றோ பாலத்தை (கிராமரோடு, ஸ்பர்டாங்கு ரோடு சந்திப்புக்கு அருகில்) விரிவுபடுத்தவும் விரும்பியது என்றும் இந்த வேலை இன்னும் ஒரு மாதத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் கமிஷனர் கூறினார். மற்றும் பல சாலைகள் சந்திப்புக்களை மேம்பாடு செய்வதென்றும் குழு முடிவு செய்ததாகக் கூறினார்.

# கருநாடக மாநில சட்டமன்ற இடைத் தேர்தல்

## கழக வேட்பாளர் போட்டியிடுகிறார்

கருநாடக மாநிலம் கோலார் தங்கவயல் சட்டமன்றத் தொகுதியில் நவம்பர் 11-ல் நடைபெறும் இடைத் தேர்தலில் தி. மு. கழக வேட்பாளராக திரு. ஆர். தங்கராஜ் அவர்கள் போட்டியிடுகிறார் என்று இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இரா. நெடுஞ்செழியன்,
தலைவர், தி. மு. க. ஆட்சிமன்றக் குழு

# ரூ. 12 கோடி முதலீட்டில் பாலிதிலின் தொழிற்சாலை

## பம்பாயில் தனியார் துறை ஏற்பாடு

பம்பாய், நவ. 2— பாலிதிலின் உற்பத்தி செய்ய இந்தியா—மேற்கு ஜெர்மன் கூட்டுறவில் தனியார் துறையில் ரூ. 12 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொழிற்சாலை, இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. பம்பாய்—தாணாவுக்கருகில் தொழில் பேட்டையில் இந்தத்தொழிற்சாலை இருக்கிறது. இந்த கூட்டில் சேர்ந்துள்ள ஜெர்மன் நிறுவனத்தின் அதிபரான பேராசிரியர் காரில் வின்னாக்கர் அதைத் திறந்து வைத்தார்.

இங்கிகழ்ச்சிக்கு ஜி. டி. பிர்லா தலைமை வகித்தார்.

பிர்லா பேசுகையில் இந்தியாவுக்குத் தேவை அந்நிய நிதி உதவியல்ல என்றும், அந்நிய முதலீடும், அந்நியத் தொழில் நுணுக்க உதவியுமே தேவை என்றும் கூறினார். அந்நிய உதவி குறைக்கப்பட்டுவிட்டது பற்றி இந்தியா வருந்த வேண்டியதில்லை யென்றும், இதன் பலனாகக் கூட்டு முயற்சி என்ற வகையில் இங்கு அந்நியர் முதலீடு அதிகரிக்க வழிபிறக்கும் என்றும் கூறினார்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

என்று காந்தியவாதியும், முன்னாள் மத்திய அமைச்சரும் 'சம்யுக்த கர்நாடகா' என்னும் கன்னட நாளேட்டின் ஆசிரியருமான திரு. ஆர். ஆர். திவாகர் பெங்களூரில் பேசுகையில் குறிப்பிட்டார்.

காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பாவும், கருநாடக மாநில அமைச்சர்களும், 'மொழிவழி மாநிலங்கள் இந்திய ஒற்றுமைக்கு இடையூறாக இருக்குமேயானால், அவற்றை மாற்றியமைக்கத் தயங்கமாட்டோம்' என்று அடிக்கடி கூறிவருவதைக் கண்டிக்கும் வகையிலேயே அவர் இவ்விதம் கூறினார்.

# தமிழகத்தில் இரு புதிய தொழிற்சாலைகள்

## அயல் நாட்டு நிறுவனங்கள் காட்டும் ஆர்வம்

சென்னை, நவ. 3— தமிழகத்தில் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதில் இரண்டு பெரிய அயல்நாட்டுத் தொழில் நிறுவனங்கள் ஆர்வம் காட்டியுள்ளன என்று கைத்தொழில் துறை அதிகாரியொருவர் கூறினார்.

ஒரு அந்நியத் தொழில் நிறுவனம் ரூ. 2 கோடி செலவில் எலக்ட்ரானிக் சாதனங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த அனுமதி கோரியிருக்கிறது என்றும் மற்றொரு அந்நிய நிறுவனம் சென்னைக் கருகில் ரூ. 2 கோடி ஆரம்ப விடுமுதல் செய்து மருந்து தொழிற்சாலை ஏற்படுத்த விரும்புகிறது என்றும் அந்த அதிகாரி கூறினார்.

தமிழகத்தில் தனியார் துறையில் பாலிஸ்டர் நூல் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த மத்திய அரசின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் சொன்னார்.

# மாற்றுக் கட்சி ஆட்சிக்கு எதிராக டெல்லி நடவடிக்கை?

## தனிப் போலீசுப் படை ஏற்படுத்தத் திட்டமாம்

### சட்ட அமைச்சர் வெளியிடும் தகவல்

கோச்சி, நவ. 3— மத்திய அரசுக்குத் தனியான ஒரு போலீசுப் படையை உருவாக்கும் முறையில் மத்திய ரிசர்வ் போலீசாருக்கு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும் அதிகாரம் வழங்குவது பற்றி மத்திய உள்துறை பரிசீலிப்பதாக சட்ட அமைச்சர் கோவிந்த மேனன் நேற்று கூறினார்.

பல்வேறு மாநிலங்களிலும் மத்திய ரிசர்வ் போலீசுப் படைகள் இப்போது முகாம் செய்துள்ளன. மத்திய அரசு ஊழியர்களின் குறைகளை விரைவில் தீர்ப்பதற்கு ஏற்ற வகையில் ஊழியர் ஆலோசனை அமைப்புப் போன்றவற்றை அரசு திருத்தி அமைக்கும் என்றார் அவர்.

அரசு ஊழியர் வேலை நிறுத்தத் தடை மசோதாவுடன் இந்த நடவடிக்கையும் வரும் என்றும் தற்போது மத்திய ரிசர்வ் போலீசார் கைது செய்யும் நபர்களை மாநிலப் போலீசாரிடம் ஒப்படைத்து மாநில அரசே வழக்கு நடத்தவேண்டியுள்ளது என்றும் மத்திய அரசை எதிர்க்கும் மாநில அரசுகளும் இருப்பதால் மத்திய போலீசாருக்கே வழக்குத் தொடரும் அதிகாரமும் அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்து உள்ளது என்றும் அவர் கூறினார்.


# தொழில் வணிகத் துறை

சேப்பாக்கம், சென்னை-5.

## மின்சாரத் தொழிலுக்கான தொழிற்பேட்டை, காக்களூர்

செங்கற்பட்டு மாவட்டம் திருவள்ளூருக்கு அருகில் உள்ள காக்களூரில் மின்சாரத் தொழிலுக்காக நன்கு அமைக்கப்பட்டுள்ள தொழிற்பேட்டையில் சதுர அடிக்கு மாதம் 10 காசு வீதம் குறைந்த வாடகையில் 1968 நவம்பர் இறுதிவாக்கில் கீழ்வருமாறு இடவசதி கிடைக்கும் :—

| யூனிட்டுகளின் வகை | பயன்படுத்தக் கூடிய இடப் பரப்பு (சதுர மீட்டரில்) | தோராயமான மாத வாடகை |
|---|---|---|
| I (இரண்டு எண்ணிக்கை) | 529--55 (5700 சதுர அடி) | ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 1.08. (ஒரு சதுர அடிக்கு மாதம் ரூ. 0.10). |
| II ( „ ) | 396--70 (4270 „ ) | |
| III ( „ ) | 262--91 (2830 „ ) | |
| IV ( „ ) | 162--58 (1750 „ ) | |
| V ( „ ) | 127--74 (1375 „ ) | |

தேவைப்படும் சிறு தொழில் நிறுவனங்கள், இந்த விளம்பரம் வெளியான இருபத்தோரு நாட்களுக்குள் உரிய விண்ணப்பத் தாளில் சென்னையில் உள்ள தொழில் வணிகத் துறை இயக்குநருக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். 'ரெவின்யூ டெபாசிட்' என்ற இனத்தில் தொழில் வணிகத் துறை இயக்குநர் பெயருக்கு ரூ 1000 செலுத்தியதற்கான சான்றிதழை (செலான்) இணைத்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

ஒருவருடைய விண்ணப்பம் ஆராயப்பட்டு அவருக்கு இடம் ஒதுக்கப்படவில்லை என்றால், இந்த டெப்பாசிட் தொகை திரும்பக் கொடுக்கப்பட்டுவிடும். மேற்கொண்டு விவரமறிய இந்த அலுவலகத்தின் துணை இயக்குநர் (வணிகத் துறை) அவர்களுடன் தொடர்புகொள்க.

தொலைபேசி : 84314 (எக்ஸ்டென்ஷன் 19)

இயக்குநர், தொழில் வணிகத் துறை,
சென்னை-5.


# தமிழ்நாட்டில் விண்வெளிக் கோள் ஏவு நிலையம்

## ஓராண்டில் வேலை துவங்கும்

திருவனந்தபுரம், நவ. 2— "விண்வெளிக் கோள் ஏவு நிலையம் ஒன்று சென்னையிலிருந்து 50 மைல் தொலைவுக்குள் நிறுவப்படும்" என்று, அனுசக்திக் கமிஷன் தலைவர் டாக்டர் விக்ரம ஏ. சாராபாய் தெரிவித்தார்.

இங்கு நிருபர்களிடையே அவர் பேசுகையில், சூளூர்பேட்டைக்கு அருகே ஓர் இடம் பரிசீலனையில் உள்ளது என்றும், நிர்மாணவேலை ஓராண்டில் துவங்கும் என்றும் குறிப்பிட்டார்.

குறைந்த உயரம் செல்லும் விஞ்ஞான விண்கோள்கள் 5 ஆண்டுக் காலத்தில் ஏவி விடப்படும் என்று அவர் கூறினார்.

பெருமளவில் டெலிவிஷன் திட்டத்தை மேற்கொள்ள மிகவும் எளிய வழி விண்கோள்கள் என்றார்.

"சந்திர மண்டலத்தை நோக்கிச் செல்வதை நோக்கமாக கொள்ளவில்லை. இங்குள்ள விண்வெளி விஞ்ஞான ஆராய்ச்சி கேந்திரம் துரித முன்னேற்றத்தை அடைந்துவருகிறது. விண் வெளி விஞ்ஞானத்தில் இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்க மாநில அரசும் இப்பல்கலைக்கழகமும் இவ்வசதிகளை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த கேந்திரத்துக்கு சில ஆண்டுகளுக்குப் பின் 3 ஆயிரம் விஞ்ஞானிகள் தேவைப்படலாம். எனவே எஞ்சினீயரிங், விஞ்ஞான போதனை நிலையங்கள் இவ் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள முன்வர வேண்டும்" என்று டாக்டர் சாராபாய் மேலும் கூறினார்.

# சென்னைப் பல்கலைக்கழகத்தில் திருக்குறள் ஆராய்ச்சி

சென்னை, நவ. 3 — திருக்குறளின் இலக்கிய வளம் குறித்து சென்னைப் பல்கலைக் கழகம் ஆராய்ச்சி மேற்கொள்கிறது.

கடந்த ஜனவரியில் சென்னையில் நடந்த இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டினையொட்டி திருக்குறள் ஆராய்ச்சியை மேற்கொள்வதற்காக சென்னை, அண்ணாமலை, மதுரை ஆகிய மூன்று பல்கலைக் கழகங்களுக்கும் ஒவ்வொன்றுக்கும் ரூ. 3 இலட்சம் வீதம் கொடுக்கப்பட்டது நினைவிருக்கலாம்.

சென்னைப் பல்கலைக் கழகம் இந்த நன்கொடையை ஏற்றுக் கொண்டு திருக்குறள் ஆராய்ச்சி நடத்த ஒப்புக்கொண்டது.

மூன்று பல்கலைக் கழகங்களின் பிரதிநிதிகளும் கூடி ஒவ்வொரு பல்கலைக் கழகமும் திருக்குறளின் எந்தப் பிரிவை ஆராய்வது என்பதை முடிவு செய்தனர். அதன்படி சென்னைப் பல்கலைக் கழகம் திருக்குறளின் இலக்கிய ஆய்வுகள் குறித்தும் ஆராய்ச்சி மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

கொடுக்கப்பட்டுள்ள நிதி வசதியைப் பொறுத்து, திருக்குறள் ஆய்வு வேலைகளுக்காக ஓர் ஆசிரியர் ஒரு விரிவுரையாளர் ஓர் ஆராய்ச்சி வல்லுநர் ஆகிய மூன்று பேரை மட்டும் நியமிப்பது எனப் பல்கலைக் கழகப் பிரதிநிதிகளவை முடிவு செய்துள்ளது. இவர்களது பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும்.

# அறிவியல் மேதை மேரி கியூரி

## நினைவு அஞ்சல்தலை வெளியீடு

புதுடில்லி, நவ. 1— அறிவியல் துறையில் புகழ் பெற்று விளங்கிய மேரி கியூரியின் நினைவைப் போற்றும் வகையில் அவரது நூறுவது பிறந்த நாள் விழாவின் இறுதியில் அஞ்சல் துறை இம்மாதம் 6-ஆம் நாள் சிறப்பு அஞ்சல் தலை ஒன்றை வெளியிடப் போகிறது.

1903-ம் ஆண்டில் அவரது கணவர் பியர் கியூரியுடன் கூட்டாக நோபல் பரிசு கிடைத்தது. கதிரியக்க இரசாயனப் பொருள்கள் சம்பந்தமாய் இவர்கள் ஆராய்ச்சி நடத்தினார்கள்.


***********************

# சென்னை மாநகராட்சித் தேர்தல்

# வெற்றி விழா --

## பாராட்டு -- நன்றியறிவிப்புக் கூட்டம்

★

5--11--68 செவ்வாய் மாலை 6-மணிக்கு

சென்னை--நேப்பியர் பூங்காத் திடலில்

தலைவர் : காஞ்சி மணிமொழியார்

## மாண்புமிகு அமைச்சர்கள்--

கழக முன்னணியினர்--

சர்வகட்சித் தலைவர்கள்

பாராட்டி நன்றி தெரிவித்துப் பேசுவர்

★

## வெற்றி பெற்ற கழக-கூட்டணி வீரர்கள்

அறிமுகப்படுத்தப்படுவர்

அனைவரும் வாரீர் !

—சென்னை மாவட்ட தி.மு.க.

***********************


# அதிகாரி கைது!

## தவறான வழியில் சொத்து சேர்த்தாராம்

அசாம் அரசாங்கப் பொதுப் பணித் துறையில் சப்-டிவிஷனல் அதிகாரியாக ஒருவர் வேலை பார்த்துவந்தார்.

ஆறு ஆண்டுகளில் அவருக்கு மொத்த வருமானம் ரூ. 29,000 தான் கிடைத்திருக்க வேண்டும். ஆனால், அவரோ ஆறு ஆண்டுகளில் ரூ 1 23 இலட்சம் பெறுமானமுள்ள சொத்துக்களையும், ரூ. 1.50 இலட்சம் ரொக்கமும் சம்பாதித்துவிட்டார்.

அவர்மீது அசாம் மாநில இலஞ்ச ஒழிப்புத் துறையின் வழக்குப் போட்டிருக்கிறார்கள். அவர் கைது செய்யப்பட்டார். அவருடைய சொத்துக்களையும், பாங்கிகளில் அவர் பெயரில் இருந்த ரொக்கத்தையும் பறிமுதல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.